# ஈழத்தில் பெண்களுக்கான சஞ்சிகைகள் : ஓர் உள்ளடக்க ஆய்வு

**துலக்ஷா, .பி., யூட் டினேஸ் கொடுதோர். சூ.**
ஊடகக்கற்கைகள் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
thulakshaprem athas@gmail.com

*தொடர்பாடலையும் ஊடகங்களையும் வேறுபிரித்து விட முடியாத வகையில் தொடர்பாடலை கட்டமைக்கும் அடிப்படைக்காரணிகளாக ஊடகங்கள் அமைகின்றன. இவ்வகையிலே வெகுஜன ஊடகங்களில் பழைமையான ஊடகமாக கருதப்படுவது அச்சு ஊடகமாகும். அச்சு ஊடகம் என்ற வகைப்பிரிப்பில் பொதுவாக பத்திரிகைகள், நூல்கள், சஞ்சிகைகள், துண்டுப்பிரசுரங்கள் என்பவற்றை குறிப்பிட்டுக் கொள்ளலாம். அவ் வகையில் இவ் ஆய்வானது அச்சு ஊடகத்தில் ஒன்றாக விளங்கும் சஞ்சிகைகள் தொடர்பானதாக அமையப்பெற்றுள்ளது. இந்த ஆய்வானது இலங்கையிலிருந்து 1970- 2000 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் வெளிவந்த பெண்களுக்கான சஞ்சிகைகள் என்ற வகையில் பெண்ணின்குரல், நங்கை, நிவேதினி, பெண் எனும் சஞ்சிகைகளை மாதிரியாகக் கொண்டும் அவற்றின் உள்ளடக்கத்தினை மையமாகக் கொண்டும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் இவ் ஆய்வானது உள்ளடக்க பகுப்பாய்வு முறையினை அடிப்படையாகக் கொண்டு ஆய்வாளரின் பார்வையிலும் சஞ்சிகைகளின் ஆசிரியர் குழு, எழுத்தாளர்கள் மற்றும் சஞ்சிகை வாசகர்களினை மாதிரியாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. குறித்த இவ் ஆய்வில் முதனிலைத்தரவாக குறிப்பிட்ட காலப்பகுதியில் வெளிவந்த பெண்ணின்குரல், நங்கை, நிவேதினி, பெண் சஞ்சிகைகள் என்பனவும், சஞ்சிகைகளின் ஆசிரியர் குழு நபர்கள், எழுத் தாளர்கள், வாசகர்கள் என்போரின் நேர்காணல்களும் அமையப்பெற்றுள்ளன. இரண்டாம் நிலைத்தரவுகளாக ஆய்வுடன் தொடர்புடைய ஆய்வுக்கட்டுரைகள், நூல்கள், ஆய்வேடுகள் போன்றன அமைந்து காணப்படுகின்றன. ஈழத்தில் பெண்கள் சார்ந்து வெளிவரும் சஞ்சிகைகள் பற்றிய ஒரு தெளிவினையும், சஞ்சிகைகளில் பால்நிலை சார்ந்துபெண்கள் பற்றிய சமூகத்தின் கண்ணோட்டம் எவ்வாறு இருக்கின்றது என்ற தெளிவினையும் நோக்கமாகக் கொண்டு இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த வகையில் இவ்ஆய்வானது சஞ்சிகை களின் உள்ளடக்கம் என்னும் தன்மையில் சஞ்சிகைகளின் அட்டைப்பக்கங்கள், ஆசிரியர் தலையங்கங்கள், படைப்பாக்க விடயதானங்கள், பக்க வடிவமைப்புக்கள் என்பனவற்றினைப் பற்றிப் பேசும் தன்மையில் அமையப் பெற்றுள்ளதுடன் இந்த ஆய்வு எண்சார்ந்த முறையிலும் பெறுதிசார்ந்த முறையிலும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. எண்சார்ந்த முறையில் சஞ்சிகைகளின் ஆசிரியர் தலையங்கங்கள் ஆய்விற்கு உட்படுத்தப்பட்டன. பெறுதி சார்ந்த முறையில் சஞ்சிகையின் உள்ளடக்க படைப்பாக்கங்கள் ஆராயப்பட்டன. இந்த வகையில் இவ் ஆய்வின் முடிவானது மேற்குறிப்பிட்ட சஞ்சிகைகள், சஞ்சிகைகளுக்குரிய பல்பரிமாண தன்மையான இயல்புகளை கொண்டுள்ளது என்பதனை சஞ்சிகைகளின் அட்டைப்பக்கங்கள், ஆசிரியர் தலையங்கங்கள், கட்டுரைகள், கவிதைகள், சிறுகதைகள் என்பனவற்றை அடிப்படையாக கொண்டு அவதானிக்க முடிகின்றது. பெண்களுக்கான பிரச்சினைகளை முதன்மைப்படுத்திய வகையில் நவநாகரிகப் போக்குகள் சார்ந்து பேசப்படும் விடயங்கள் குறைவானதாக இச்சஞ்சிகைகள் உள்ளமை இவ் ஆய்வின் முடிவாக கண்டறியப்பட்டுள்ளது.*

**திறவுச்சொற்கள் :** ஈழத்து சஞ்சிகைகள், பெண்களுக்கான சஞ்சிகைகள், உள்ளடக்கங்கள், பேசுபொருட்கள்